## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 14/2022 | Date : 15.12.2023 | PW1 |
|---|---|---|
| Name: பவித்ரா | D/o. **இளையராஜா** | |
| Evidence Recorded Time: 12.56 P.M. to 01.20 P.M. | | |

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

என் கணவருக்கு விபத்து நடைபெற்றது பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் கணவருக்கு எந்த தேதியில் விபத்து நடைபெற்றது என்றால் 01.10.2021-ல் சென்னை திருமுல்லைவாயலில் நடைபெற்றது. என் கணவரின் வயது, வருமானம் குறித்து எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 30.11.2019-ம் தேதியில் எனக்கும் என் கணவருக்கும் திருமணம் நடைபெற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை காதல் திருமணம் செய்து கொண்டோம். என் கணவர் சென்னை அம்பத்துார் 2D Team இன்ஜினியராக வேலை பார்த்து வந்தார் என்பதற்கான ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவர் மாதம் எவ்வளவு சம்பளம் பெற்றுவந்தார் என்பதற்கும், அவருடைய படிப்பை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு விபத்து நடந்த இடத்தை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை, அவரின் இறுதி சடங்கு முடியும்வரை சென்னையில் தான் இருந்தேன். விபத்து சமயத்தில் என் கணவர் என்ன வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்றார், அந்த வாகனம் என் கணவருக்கு சொந்தமான வாகனம் ஆகும். இருசக்கர வாகனத்தை ஓட்ட என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, ஓட்டுநர் உரிமம் உள்ளது. வாகனம் என் கணவருக்கு சொந்தமானது என்பதை காட்டுவதற்கும், விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதை காட்டுவதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஆல் இண்டியா ரேடியோ கம்பெனி அருகே உள்ள ரோட்டில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் காரணமாக

பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் எனது கணவர்தான் இடப்புறமிருந்து வலபுறம் வந்து பின்னால் வந்த வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. விபத்து சம்மந்தாக போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் என் கணவரின் ஆஜாக்கரதையால்தான் விபத்து நடந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால்தான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் என் கணவர் இறந்த பின்புதான் இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் கணவர் அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு நஷ்டஈடு கேட்டு என் கணவரே சென்னை மோட்டார் வாகன தீர்ப்பாயத்தில் இழப்பீட்டு MCOP.4517/2021 மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும், நான் என் கணவரின் சட்டப்படியான வாரிசு என்று என் கணவர் தாக்கல் செய்த வழக்கில்தான் என்னை தரப்பினராக சேர்த்து என் கணவர் தாக்கல் செய்த வழக்கை நடத்த முடியும் என்றால் சரியல்ல. விபத்திற்கு முன்னிட்டு என் கணவருக்கும் எனக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக என் கணவர் என் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் முதலில் தாக்கல் செய்தது தெரியாது, அவர் இறந்த பின்பு ஒரு வாரம் கழித்து நீதிமன்றத்தில் அழைப்பாணை வந்த பிறகுதான் அவர் வழக்குதாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியவந்தது, சென்னையில் இருந்த வரை எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. என் கணவர் தாக்கல் செய்த விவாகரத்து மனு பற்றி எனக்கு தெரியாது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரும் நானும் அவரின் இறப்பு வரைக்கும் ஒன்றாக இருந்ததற்கான ஆதாரம் இல்லை என்றால் இல்லை. என் கணவரின் இறப்பிற்கு முன்பே மன வேறுபாடு ஏற்பட்டு நாங்கள் பிரிந்த விட்டதால் என் கணவரின் வருமானத்தை நம்பி நான் இருந்தது இல்லை என்பதால் இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, நான் அவருடன் இருந்தேன், அவர் வருமானத்தை நம்பிதான் இருந்தேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எந்தவிதமான இழப்பீடும் தர கடமைப்பட்டவர்

அல்ல என்றால் சரியல்ல. எனக்கு நஷ்டஈடு வழங்குவதாயிருந்தால் 1ம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றாலும், 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. ஒரே விபத்திற்கு இரு வழக்குகளை இரண்டு நீதிமன்றங்களில் இரண்ட நிவாரணங்கள் கேட்டு தாக்கல் செய்ய முடியாது என்பதால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக்
காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என்
முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.